**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 8**

**Name** : திரு. பெரியசாமி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-01-2023.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன ரமேஷை தெரியும். சாட்சிகளை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் நிலத்தில் இருந்து வீட்டிற்கு போகும் வழியில் ரமேஷ் வீட்டிற்கு முன்பாக அவரது சடலத்தை வைத்து அவரை கொலை செய்து விட்டதாக சாலை மறியல் செய்தார்கள். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் இறந்து போன ரமேஷ் என்பவர் சரண்யாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், அவருக்கு குடிப்பழக்கம் இருந்து வந்தது என்றும், அதனால் அவர்களுக்குள் அடிக்கடி தகராறு இருந்து வந்தது என்றும், சரண்யாவின் தங்கை கணவர் 2 எதிரி கார்த்திகேயனுக்கு நீண்ட நாள் கள்ளத்தொடர்பு இருந்து வந்தது என்றும், அதனை ரமேஷ் கண்டித்தார் என்றும், 7.3.2013ந் தேதி இரவு 1.30 மணிக்கு நான் என் நிலத்திற்கு தண்ணீர் இரைப்பதற்காக ரமேஷ் வீட்டின் வழியாக சென்ற போது அவர் வீட்டில் இருந்து ஐயோ என்னை கொல்றாங்களே என்று ரமேஷ் குரல் கேட்டது என்றும், இவனை அடித்து கொன்று விடு என்று சரண்யாவின் குரல் கேட்டது என்றும், நான் வீட்டிற்குள் சென்று பார்த்த போது எதிரிகள் மூவரும் இருந்தார்கள் என்றும், சரண்யா ரமேஷின் இரண்டு கைகளையும் பிடித்து கொண்டார் என்றும், கார்த்திகேயன் தனது கைகளால் ரமேஷின் மார்பில் மாறி மாறி குத்தினார் என்றும், மேலும் கார்த்திகேயன் ரமேஷின் இரண்டு கைகளையும்

கட்டிவிட்டார் என்றும், எங்களை பார்த்தவுடன் எதிரிகள் மூவரும் ஓடிவிட்டார்கள் என்றும், சம்பவத்தை பார்த்த நாங்கள் பயந்து வந்து விட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை.

ஒம்/- பெரியசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 9**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. கலைவாணன் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-01-2023.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன ரமேஷை தெரியும். சாட்சிகளை தெரியும். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் ரமேஷ் என்பவர் 2ம் எதிரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், 1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்தது என்றும். 7.3.2013 அன்று இரவு 1.30 மணிக்கு ரமேஷ் வீட்டில் சண்டை நடந்தது என்றும், அப்போது 1ம் எதிரி அருகில் இருந்த கயிற்றை எடுத்து ரமேஷின் கழுத்தை இருக்கி கொன்று விட்டார்கள் என்றும் அடுத்த நான் சென்று பார்த்தபோது ரமேஷின் உடலில் காயங்கள் இருந்தது என்றும், மேலும் கழுத்தில் கன்றிய காயங்கள் இருந்தது என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- கலைவாணன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 10**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. சரத்குமார் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-01-2023.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன ரமேஷை தெரியும். சாட்சிகளை தெரியும். நான் மருத்துவமனையில் ரமேஷை பார்ப்பதற்காக சென்றேன். அங்கே எதிரிகள் ரமேஷை அடித்து கொன்று விட்டதாக பேசிக்கொண்டார்கள். ரமேஷிற்கு உடம்பு முழுவதும் சில்லி சில்லியாக கிழிக்கப்பட்டு இருந்தது. அதனை பார்த்து விட்டு நான் வெளியே வந்து விட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்ததை கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

இறந்து போன ரமேஷ் எனது சொந்த சித்தப்பா. அ.சா.1 ரவி என்னுடைய சித்தப்பா. அ.சா.2 மீனா என் சொந்த அத்தை. அ.சா.5 என் சித்தி, சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் போலீசார் விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதிக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு பிறகு விசாரித்தார்கள். எந்த போலீஸ் அதிகாரி விசாரித்தார் என்று நியாபகம் இல்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. அ.சா.1, 2, 5 எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், ரமேஷின் உடலை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- சரத்குமார்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.